**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இடையிலே பல்வேறு காரணங்களுக்காக பள்ளிகள் மூடப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் ஒரு ஆண்டில் எப்படியாது 200 நாட்கள் வேலை செய்கின்ற அளவுக்கு அது பணியாற்றவேண்டும் என்ற முயற்சிதான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இடையிலே சிலபல நாட்கள் விடுமுறை விடவேண்டிய அவசியம் வந்தால், தேர்வுக்கு முன்னால் இருக்கிற நாட்களை ஈடு கட்ட வேண்டும். இல்லாவிட்டால், சனிக் கிழமைகளில் பள்ளியை வைத்து ஈடு கட்டவேண்டும் என்று இருக்கிறது. எப்படியும் 200 நாட்களுக்கு வேலை செய்யவேண்டும் என்ற அளவுக்குத் தான் இருக்கிறது. இப்பொழுதே 200 நாட்கள் என்பது தேர்வுக்கு ஒதுக்கப்பட்ட நாட்களையும் சேர்த்து. நாங்கள் கேட்டுக்கொண்டோம், தேர்வு நாட்களை நீக்கி 200 நாட்கள் பள்ளிகளை நடத்தவேண்டும் என்று. ஆனால் அதற்கே ஆசிரியர் பெருமக்கள் அதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தாத காரணத்தினால் அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

## *Private Appearance for S.S.L.C. Examination*

* 784 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether men students with a pass in VIII standard, are allowed to write the S.S.L.C. examinations privately; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 18 வயது நிரம்பியவர் அனைவரும், ஏற்பு அளிக்கப்பட்ட இம்மா நிலப் பள்ளிகளில் 8-வது வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமான தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால், தனிப்பட்ட முறையில் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுது 'எய்ட்த் ஸ்டாண்டர்டு' படித்த பையன்கள் பிரைவேட்டாக மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்களே? அதே மாதிரி எஸ.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதுவதற்கும் அந்த அளவுக்கு அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் 8-வது வகுப்பு தேறியிருக்கவேண்டும். அல்லது 8-வது வகுப்புக்கு ஈடான அளவுக்கு ஈ. எஸ். எல். சி. பரீட்சை எழுதி அதில் தேர்வு பெற்றிருக்கவேண்டும். ஸீனியர் பேசிக் எஜுகேஷன் சர்டிபிகேட் அவர்கள் பெற்றிருக்கவேண்டும். அதாவது

9-வது வகுபபிலே சேர்வதற்குத் தகுதி பெற்று இருப்பவர்களும், அவர்களுடைய வயது 18-க்கு மேல் ஆகிறவர்களும் எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதலாம் என்று இப்பொழுது அனுமதிக்கப்படுகிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** தமிழ் நாட்டில் 8-வது வகுப்பு படித்தவர்கள் எத்தனை லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் ? அவர்களை தொழில் நுட்பப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்வதற்கு அரசு வழி வகைகள் செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கணக்கு எடுக்க இயலாது. ஆனால் 8-வது வகுப்பு படித்தவர்கள் ஐ.டி.ஐ இண்டஸ்டிரியல் டிரையினிங் இன்ஸ்டிட்யூட்களில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு வழிவகை இருக்கிறது

**திரு. பெ. சீனிவாசன் :** இப்பொழுது வேறு மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகத்தில், மாணவர்கள் தனியாக பரீட்சை எழுதுவதற்கு உற்சாகப்படுத்துகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் சர்வகலாசாலையும் சரி, அரசாங்கமும் சரி, இப்படிப்பட்ட விதியை அதாவது உயர்நிலைப் பள்ளியில் படித்தால்தான் எஸ்.எஸ்.எல்.சி பரீட்சை எழுதலாம் என்று கண்டிப்பான விதியை தளர்த்தி யார் வேண்டுமானாலும் குறிப்பிட்ட வயதுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி மெட்ரிக், பி.ஏ. பரீட்சைகள் எப்பொழுது வேண்டுமானாலும் பிரைவேட்டாகப் படித்து எழுதலாம் என்பதாக, எஸ்.எஸ்.எல்.சி பரீட்சை பிரைவேட்டாக படித்து எழுதுவதை அரசாங்கம் உற்சாகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பல்கலைக் கழகங்கள் தான் அதற்கு விதிமுறைகள் தந்து இருக்கின்றன. ஏற்கனவே பெண்கள் 18 வயதை அடைந்து இருந்தால் எழுதலாம் என்று இருந்தது. சென்ற ஆண்டு தான் ஆண்களாக இருந்தாலும் 18 வயதாகி இருந்து, 8-வது தேறியிருந்தால் எஸ்.எஸ்.எல்.சி-க்கு தனியாக எழுதலாம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அது போல் மதுரைப் பல்கலைக்கழகத்திலும் அஞ்சல் வழிப் பாடப்பயிற்சி என்ற முறையில் பட்டப்படிப்பு படிக்கும் வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, 8-வது வகுப்பு வரை படித்திருந்தவர்களுக்கு முன்பு ஹையர் கிரேடு டிரெயினிங் கொடுத்து ஆசிரியர்களாக வந்தார்கள். இப்போது ஹையர் கிரேடு டிரெயினிங் நிறுத்தப்பட்டு விட்டதால், 8-வது வகுப்பு வரை படித்துள்ளோருக்கு இருந்த வேலை வாய்ப்பு குறைந்து விட்டது. எனவே, 8-வது வகுப்பு வரை படித்துள்ளவர்களுக்குத் தனியாக வேலை வாய்ப்பு ஏற்படுத்த அரசு முன்வருமா ?

1974 ஏப்ரல் 9]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 8-வது வகுப்பு படித்தவர்களுக்கு என்று தனியாக வேலைவாய்ப்பு இல்லை. இப்போதே பல்வேறு வகையில், அட்டெண்டர் போன்ற பதவிகளுக்கு, ஐ.டி.ஐ. பயிற்சிக்கு 8-வது வகுப்பு வரையில் படிப்பு இருந்தால் போதுமானது என்று கூறப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இப்போது எல்லாம் தொழிற்சாலையில் சேருவதற்குக்கூட எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள் போலீஸ்காரர்கள் வார்டன் போன்றவைகளுக்குக் கூட எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது 8-வது வரை படித்துவிட்டு இருப்பவர்களுக்கு வேலை கிடைக்காமல், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களை எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க உற்சாகப்படுத்தி, எளிதான முறையில் அவர்கள் படித்து தேர்ச்சி பெறுவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. 10-வது வகுப்பு வரை படிப்பதற்கு இலவச கல்வி வசதி அளித்து இருக்கிறோம். 8-வது வரை படித்தவர்கள் பத்தாவது வரை படிப்பதற்கு எந்த விதப் பணச்செலவும் இல்லை. அவரவர்கள் குடியிருக்கிற இடங்களுக்குப் பக்கத்திலேயே உயர்நிலைப்பள்ளிகள் இருக்கக்கூடும். அப்படி அவர்கள் படிக்காமல் நின்றுவிட்டு, 5-6 ஆண்டுகளுக்குப் பின் படிக்கவேண்டுமென்ற ஆர்வத்தால் படிக்க வேண்டும், எஸ்.எஸ்.எல்.சி. தேரவேண்டுமென்று விரும்பினால், அவர்கள் 18-வது வயதை எய்தி யிருந்தால் அவர்கள் தனியாகப் படித்து தேர்வு எழுதலாம். சென்ற ஆண்டில் இருந்து அவர்கள் தனியாகப் படித்து எழுதும் வாய்ப்பை கொடுத்து இருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், சென்ற ஆண்டிலிருந்து ஆண்களுக்கும் அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டது நல்ல ஏற்பாடு தான். இரண்டு இலட்சம் பேர் வரை எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுகிறார்களே, அவர்களிலே எத்தனை சதமானம் பிரைவேட்டாக எழுதுகிறார்கள் என்ற விவரம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றி விவரக்குறிப்பு இல்லை. சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு 10 ஆயிரத்துச் சொச்சம் பேர் எழுதியிருக்கிறார்கள்.